

# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-
Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-

# சோதனையைச் சாதனையாக மாற்றுவார்!

மலர்: 19 | Volume: 19 பிப்ரவரி 2024 | February 2024 இதழ்: 10 | Issue: 10







ஒடிசா மாநிலம் சித்ரகோண்டா,
லம்டாபுட், ஜெய்ப்பூர் பணித்தளங்களில்
நடைபெற்ற சுவிசேஷ பணி





# உங்கள் சகோதரனிடமிருந்து...



இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு, தேவனுடைய கிருபையினாலே பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழச்சியடைகிறேன். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் சுகமாயிருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் முழு நிச்சயமாய் நம்புகிறேன். கடந்து வந்த ஆண்டுகளிலெல்லாம் கண்ணின்மணி போல பாதுகாத்து வந்த தேவன் இந்த புதிய ஆண்டிலும் பாதுகாத்து நடத்துவார். **...இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன். – ஏசாயா46:4** ஏனென்றால் அவர் வாக்குமாறாத தேவன். அவர் தாம் சொன்னபடியே உங்களை நடத்துவார். வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிறவர் இந்த ஆண்டை நன்மையின் ஆண்டாக மாற்றுவார் என்பதை நீங்கள் சந்தேகமில்லாமல் விசுவாசிக்கும் போது அப்படியே ஆகும். ஆகவே, தளர்ந்த கைகளை உறுதிப்படுத்தி சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணுங்கள். தேவன் நிச்சயமாகவே தடைபட்ட எல்லா நன்மைகளையும் இந்த ஆண்டில் தருவார்.

உங்கள் ஜெபங்களில் நமது மிஷனெரிகளை நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்காக ஒவ்வொரு நாளும் நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபித்து வருகிறேன். தேவனுடைய கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

**(T.ஆசீர் ஞானராஜ்)**

வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

**96294 99532**


24 மணி நேர ஜெப உதவிக்காக:

**94869 19522, 81909 25800**

**ஊழிய விபரங்களுக்கு: 96294 99532**

Email: calvarygospelmm@gmail.com


Follow us youtube channel:

**Asir Gnanaraj**

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**



# சோதனையைச் சாதனையாக மாற்றுவார்!

**சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். – யாக்கோபு 1:12**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

1994வது ஆண்டு தற்கொலைக்கு நேராக போகும் போது நான் ஆண்டவராலே தொடப்பட்டு ஆண்டவரை தரிசித்தேன். விலையேறப்பெற்ற இரட்சிப்பை அவர் என் வாழ்க்கையிலே கொடுத்தார். என் பாவத்தை மன்னித்தார். நல்ல சமாதானத்தை என் உள்ளத்திலே தந்தார். நான் ஆண்டவரை சந்திக்கும் நாளிலே பாவக் கட்டுகளோடு கூட தரித்திர கட்டுகளோடு பிசாசின் பிடியில் இருந்தேன். என்னுடைய சரீரத்திலே அல்சர் வியாதியினால் பாதிக்கப்பட்டு தண்ணீர் கூட விழுங்க முடியாத அளவிற்கு மிகவும் சுகவீனமாக இருந்தேன். எங்கள் வீட்டில் எனக்கு பெயரே வியாதியஸ்தன் தான்.

எந்தவியாதி வந்தாலும் முதலில் எனக்கு தான் வரும் என்பது போல அடிக்கடி நான் பலவீனப்பட்டு விடுவேன். எனக்கு வைத்தியம் பார்ப்பதே என் தாயாருக்கு முழுநேர வேலையாக இருக்கும். நான் இரட்சிக்கப்பட்ட பின்பு தான் ஆண்டவர் அதிலிருந்து விடுதலையைத் தந்தார். அதுவரைக்கும் அதிகமாக எனக்காகத் தான் நெருக்கப்படுவார்கள். ஏனென்றால் அதிகமாக நான் பலவீனப்படுவேன். அந்த நாட்களில் என் சரீரத்தின் தோற்றத்தைப் பார்த்தால் மிகவும் மெலிந்து காணப்படுவேன். மிகவும் பெலவீனமான ஒரு மனிதன். எனவே அந்த வியாதியினால்

மிகவும் கஷ்டப்பட்டேன். ஒரு பக்கம் பாவத்தை என்னால் விட முடியவில்லை. இன்னொரு பக்கம் சரீரத்திலே வியாதி. குடும்பத்தைக் குறித்து பாரம். கடன் சுமை இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இந்த உலகத்தை விட்டு போய்விட வேண்டுமென்று தீர்மானித்து தற்கொலைக்கு நேராக போனபோது இயேசு என்னை சந்தித்தார். இயேசு என்னை விடுதலையாக்கினார். இயேசு எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். இயேசுவை நான் தரிசித்தநாளிலே நான் சுகத்தை பெற்றுக்கொண்டேன். மனதிலே மிகப்பெரிய மகிழ்ச்சி. இரட்சிக்கப்பட்ட பின்பு என்னுடைய சரீர தோற்றம் மாற ஆரம்பித்தது. நான் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு மிகவும் அதிகமாக உபவாசிக்க கூடியவனாக மாறினேன். எங்கள் வீட்டில் ஊழியத்திற்கு போவதற்கு அனுமதி கிடையாது. வாரத்தில் ஆறு நாட்கள் வேலைக்கு போவேன். ஞாயிற்றுக்கிழமை என்றால் நானும் என் நண்பர்களும் சேர்ந்து ஜெபிப்பது ஊழியத்திற்கு போவது என்று விடுமுறை நாட்களில் ஊழியத்தை செய்தேன். ஏனென்றால் என்னுடைய தகப்பனார் மிகவும் கண்டிப்புடன் வளர்த்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் என்னை ஊழியத்திற்காக அழைத்தார். எப்படி நான் இந்த ஊழியத்தை செய்ய முடியும் குடும்பத்தில் என்னை அனுமதிக்கமாட்டார்கள் என்ற நெருக்கடி இருந்தது. எந்த வியாதியிலிருந்து நான் சுகத்தை பெற்றுக்கொண்டு எல்லாரிடத்திலும் இயேசு எனக்கு சுகத்தைத் தந்தார் என்று சாட்சி சொல்லி ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினேனோ அதே அல்சர் வியாதி மறுபடியும் என் சரீரத்தில் வந்தது. முன்பை விட இரு மடங்கு நான் வியாதிப்பட்டேன். அந்நாட்களில் என்னுடைய குடும்பத்தார் எல்லாரும் என்னை பரியாசம் பண்ணினார்கள். இயேசு சுகத்தை கொடுத்துவிட்டார் என்று சொல்லிக் கொண்டிருந்தாய் மறுபடியும் படுக்கையில் கிடக்கிறாயே உன் இயேசு எங்கே போனார் என்று என்னை பரியாசம் பண்ணினார்கள். அந்த நேரத்தில் நான் மிகவும் மனதுக்கத்தோடு முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவரே நீர் கொடுத்த சுகம் கொஞ்ச நாள் தான் இருந்தது. நிலைத்திருக்கவில்லையே. இன்றைக்கு உம்முடைய நாமம் தூஷிக்கப்படுகிறதே நான் ஏன் இந்த உலகத்தில் இருக்க வேண்டும். உம்முடைய நாமம் தூஷிக்கப்படுகிற அளவிற்கு நான் இந்த வியாதியை சுமந்து கொண்டிருக்க வேண்டுமா? என்று வேதனையுடன் ஜெபம் பண்ணினேன். கண்ணீரோடு ஜெபித்து இரவில் சாப்பிட மனமில்லாமல் படுத்துக்கொண்டேன். அதிகாலை ஆண்டவர் ஒரு தரிசனத்தை காண்பித்தார். அந்த தரிசனத்திலே என்னுடைய இடது கையின் சுண்டு விரலில் ஒரு பெரிய முள் குத்தியிருக்கிறது. அந்த முள்ளை என்னால் எடுக்க முடியவில்லை. கையிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது. முதலாவது எனக்கு தெரிந்த ஜெபிக்கிற சகோதர சகோதரிகளிடத்தில் ஓடிப்போய் என் கையை காண்பித்து இந்த முள்ளை எடுத்துவிடுங்கள். எனக்கு மிகவும் வலிக்கிறது. என்னால் தாங்க முடியவில்லை என்று சொல்லுகிறேன். எல்லாருமே ஒவ்வொருவராக பிரயாசப்பட்டு அதை பிடுங்கிப் பார்த்தார்கள். ஆனால் ஒருவராலும் அதை எடுக்க முடியவில்லை.

அது மிகவும் ஆழமாக உள்ளே இருக்கிறது. வலி மிகவும் அதிகம். அவர்களால் முடியாததால் எனக்கு அறிமுகமான ஊழியர்களிடத்தில் ஓடிப்போகிறேன். ஐயா எப்படியாவது இந்த முள்ளை எடுத்து விடுங்கள் என்று சொல்லுகிறேன். அவர்களும் பிரயாசப்பட்டு எடுக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் ஒருவராலும் எடுக்க முடியவில்லை. கடைசியாக யாராலும் எடுக்க முடியவில்லை. பின்பு ஒரு குறுகலான பாதை வழியாக நான் நடந்து போய்க்கொண்டிருக்கிறேன். அப்பொழுது பரத்திலிருந்து ஒரு சத்தம் கேட்கிறது. மகனே இது நான் வைத்த முள். இதை நான் தான் எடுப்பேன் என்று இயேசு சொன்னார். நான் இந்த சத்தத்தைக் கேட்டு எழுந்தேன். சரீரத்தில் ஒரு பக்கம் வியாதி இருந்தாலும் மற்றொரு பக்கத்தில் ஒரு ஆறுதல் இருந்தது. என்னுடைய ஜெபம் கேட்கப்படுகிறது என்னை ஆண்டவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். நான் இந்த வியாதியை சுமந்து கொண்டிருப்பதை ஆண்டவர் அனுமதித்துக்கொண்டிருக்கிறார் என்று என் உள்ளத்தில் உணர்ந்தேன். அந்த நாட்களில் அறிமுகமான ஊழியர் ஒருவர் என்னுடைய தகப்பனார் இருக்கும் போது வீட்டிற்கு வந்து உங்கள் மகன் தான் நன்றாக ஜெபிக்கிறானே அவனை வேதாகம கல்லூரிக்கு அனுப்பி வைக்கலாமே ஆண்டவருடைய ஊழியத்தை அவன் செய்வான் என்று சொன்ன போது மிகவும் யோசித்த என் தகப்பனார் இவன் இப்பொழுது வீட்டிற்கு பிரயோஜனமில்லாமல் தான் இருக்கிறான். அவனால் வருமானம் இல்லை. அவனுக்கு நாங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் வேதாகம கல்லூரி என்று எங்கேயாவது கூட்டிக்கொண்டு போங்கள் அவனுக்கு பண்ணுகிற செலவு குறையும் என்று சொன்னார்கள். அதன்பின்பு நான் வேதாகமக் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். கர்த்தருடைய வேலையை செய்யும்படியாக பரலோகத்தின் தேவனால் தீர்மானிக்கப்பட்ட நான் என்னுடைய குடும்பத்திலிருந்து விடுவிக்கும்படியாக கர்த்தர் என்னுடைய வாழ்க்கையிலே ஒரு சோதனையைக் கொண்டு வந்தார். அந்த சோதனை தான் இன்று ஒரு பெரிய சாதனையாக என்னுடைய வாழ்க்கையிலே மாறிவிட்டது.

*சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று*


WANTED

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய

வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 9486588270,9486919522.

***விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். – யாக்கோபு 1:12***

சோதனையைச் சகிக்க வேண்டும் பாடுகளைச் சகிக்க வேண்டும். வேதாகமத்தில் சோதனை என்று ஒரு பகுதி உள்ளது சிட்சை என்று ஒரு பகுதி உள்ளது. சோதனை வேறு சிட்சை வேறு. ஆண்டவர் நியமித்த வழியை விட்டு விலகி நாம் போகும் போது கர்த்தரால் சிட்சிக்கப்படுகிறோம். அது தண்டனை. தண்டிக்கப்பட்டு அல்லது அடித்து திருத்தப்படுகிறோம். பாதையை விட்டு ஒரு ஆடு விலகிப் போகும் போது மேய்ப்பனால் தண்டிக்கப்பட்டு சரியான பாதைக்கு கொண்டு போவது போல ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே அவன் வழி விலகி போகும் போது தேவன் சிட்சிக்கிறார். வேதாகமத்தில் எழுதப்பட்ட சிட்சை வேறு, சோதனை வேறு. அந்த சோதனை தான் ஒரு மனிதனுடைய வாழ்க்கையை சாதனையாக மாற்றுகிறது. சோதனையை ஆண்டவர் ஜெயமாக மாற்றுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் வாழ்க்கையில் அவன் சிறைச்சாலையில் இருக்கும் போது அங்கே ஒனேசிமு என்ற ஒருவன் சிறைச்சாலையில் பவுலோடு கூட சேர்த்து அடைக்கப்பட்டான். சுவிசேஷ வேலையை செய்த பவுலுக்கு அந்த நாளிலே கொடுக்கப்பட்ட தண்டனை அவனுடைய கையோடு சேர்த்து ஓனேசிமுடைய கையையும் கட்டினார்கள். இது எவ்வளவு கொடிய வேதனை. சிறுநீர் கழிப்பதென்றாலும் இருவரும் ஒன்றாகத் தான் செல்ல வேண்டும். ஒரு சித்திரவதையான தண்டனையை கொடுத்திருந்தார்கள். அப்படி பவுலோடு கட்டப்பட்டிருந்த ஓநேசிமு ஒரு திருடனாக இருந்தான். பிலேமோனிடத்தில் அவன் வேலை செய்த போது அவன் உடைமைகளில் சிலவற்றை திருடி அதினால் ஓநேசிமு சிறையில் அடைக்கப்பட்டான். பவுல் எப்பொழுதும் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறவனாய் இருந்தான். ஆகவே ஓநேசிமு விரும்பாவிட்டாலும் அந்த ஜெபத்தை அவன் கேட்டுத்தான் ஆக வேண்டும். அவன் கூட முழங்காலில் நின்று தான் ஆக வேண்டும் இல்லையென்றால் அவன் ஜெபிக்கிற இடத்தில் இவன் படுத்து கொள்ள வேண்டும். ஜெப சத்தம் ஓநேசிமுவின் காதுகளில் போக போக ஓநேசிமுடைய ஆத்துமாவிற்குள்ளே ஜீவன் புறப்பட்டது. அந்த ஜெபத்தினாலே ஓநேசிமு பாதிக்கப்பட்டான். இரட்சிக்கப்பட்டான் பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொண்டான். ஓநேசிமு ஒரு நாள் சிறைச்சாலையில் இருந்து வெளியே வந்து ஆண்டவருக்காக பெரிய காரியத்தை செய்ததாக வேத ஆராய்ச்சி சொல்லுகிறது. பவுலுடைய வாழ்க்கையில் உண்டான சோதனை சாதனையாக மாறியது.

பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்குள்ளே கட்டப்பட்டிருந்தார்கள். அவர்கள் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் சிந்திக்கவில்லை. **நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்;**

***காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். – அப்.16:25*** இந்த சிறைச்சாலையிலே நாம் இருந்தால் நமக்கு துதி வருமா? துக்கம் தொண்டையை அடைக்கும் போது எப்படி துதி வரும்? ஆண்டவர் மீது நமக்கு கோபம் தான் வரும். என்ன ஆண்டவர் மேலும் மேலும் சோதிக்கிறார். சோதனை மேல் சோதனை கொடுக்கிறார் என்று ஆண்டவருக்கு விரோதமான வார்த்தைகளை நாம் பேசுவோம். ஆனால் பவுலும் சீலாவும் அவர்கள் ஒருமனப்பட்டவர்களாக கர்த்தரை துதித்து மகிமைப்படுத்தினார்கள். அங்கே சிறைச்சாலை கதவுகள் எல்லாம் உடைந்து நொறுங்கியது. அதைப் பார்த்த சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட்டான். பவுலுக்கு சந்தோஷமிருந்தாலும் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். அவனுடைய வாழ்க்கையில் துக்கம் இருந்தாலும் ஆண்டவர் இரட்சிப்பை கொடுத்தார். அந்த சோதனைகளை கர்த்தருடைய ஊழியக்காரன் சாதனையாக மாற்றியதை நாம் பார்க்கிறோம். நம்முடைய வாழ்க்கையிலே தேவன் சோதனைகளை அனுமதிக்கும்போது துவண்டு விடுகிறோம். அந்த சோதனை தான் நம்முடைய வாழ்க்கையிலே வெற்றியான நிகழ்வுகளை கொண்டுவருகிறது. யோசேப்பினுடைய வாழ்க்கையை பாருங்கள். அவன் தகப்பனால் நேசிக்கப்பட்டான். ஆனால் சகோதரர்களால் முற்றிலும் வெறுக்கப்பட்டான். காரணம் தகப்பனுக்கு பிரியமான பிள்ளையாயிருந்ததினால் அதினிமித்தமாக சகோதரர்கள் அவனை பகைத்தார்கள் வெறுத்தார்கள். யோசேப்பு ஒரு நாள் ஒரு தரிசனத்தை கண்டான். அந்த தரிசனத்தில் ***நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம். அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான். அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான். ஆதி. 37: 7– 9***

யாக்கோபு அந்த தரிசனத்தைகேட்ட போது உன் தாயும் நாங்களும் உன்னை வணங்கி நிற்போமா என்று கடிந்து கொண்டான். ஆனால் அவன் இந்த தரிசனத்தை தன் இருதயத்திலே வைத்தான். காரணம் அது தேவனுடைய தரிசனம். தரிசனம் இருந்தது தேவனுடைய திட்டம் இருந்தது வாக்குத்தத்தம் இருந்தது. ஆனால் யோசேப்புடைய வாழ்க்கையில் சகோதரர்களாலே முதலாவது யோசேப்பு பகைக்கப்பட்டான். தரிசனத்தின் நிமித்தமாக வெறுக்கப்பட்டான். அவனுடைய சகோதரர்களால் சொப்பனக்காரன் என்று பரியாசம் பண்ணப்பட்டான். முதலாவது அவனுடைய

சகோதரர்களாலே குழிக்குள்ளே தூக்கிப் போடப்பட்டான். தரிசனம் இப்பொழுது எப்படி நிறைவேறும் பார்ப்போம் என்று தூக்கிப் போட்டார்கள். இரண்டாவது யோசேப்பு குழிக்குள்ளிருந்து வெளியே எடுக்கப்பட்டு அடுத்தபடியாக இஸ்மவேலர் கையில் விற்பனை செய்யப்பட்டான். மூன்றாவதாக எகிப்திற்கு கொண்டு போகப்பட்டான். தன்னுடைய உடன் பிறந்தவர்கள் தாய் தகப்பன் எல்லாரையும் விட்டு தூரமாக கொண்டு போகப்பட்டான். அங்கே போத்திபாரின் வீட்டில் விற்பனை செய்யப்பட்டான். யோசேப்பை ஒரு பக்கம் வாங்கி மற்றொரு பக்கம் விற்பனை செய்கிறார்கள். ஒரு வியாபாரப் பொருளாக யோசேப்பு பந்தாடப்பட்டான். தரிசனம் இருந்தது. ஆனால் அவன் வாழ்க்கையில் அங்குமிங்குமாக அலைக்கழிக்கப்பட்டான். அங்கே எகிப்திலே அடிமையின் வேலைகளை செய்தான். போத்திபாரின் வீட்டிலே யோசேப்போடு கர்த்தர் இருப்பதை போத்திபார் உணர்ந்தான். அவனை தன்னுடைய வீட்டில் எல்லா வேலையாட்களுக்கும் மேலாக அதிகாரியாக வைத்தான். இங்கிருந்து தான் தரிசனம் நிறைவேறும் என்று யோசேப்பு காத்திருக்க மறுபடியும் சிறைச்சாலைக்குள்ளே யோசேப்பு தள்ளப்பட்டான். தரிசனம் வாக்குத்தத்தம் இருக்கிறது ஆனால் எப்படி நிறைவேறும் யோசேப்பு இப்பொழுது கம்பிகளுக்கு நடுவில் இருக்கிறான். குழிக்குள் தூக்கி போடப்பட்ட போதும் யோசேப்பு துக்கமடைந்திருக்கக் கூடும். சிறைச்சாலைக்குள் வந்த போதும் துக்கமடைந்திருப்பான். ஆனால் அந்த துக்கத்தை ஆண்டவர் மாற்றினார். ஏன் யோசேப்பு சிறைச்சாலைக்குள் வந்தான்? காரணம் பார்வோனின் (இராஜா) பானப்பாத்திரக்காரனை யோசேப்பு சந்திக்க வேண்டும். அந்த சந்திப்பிற்காக யோசேப்பு சிறைச்சாலைக்குள் கொண்டு போகப்பட்டான். அவனுடைய பார்வையில் அது ஒரு பெரிய வீழ்ச்சி போல தோன்றியது. சிறைச்சாலைக்குள்ளே யோசேப்பு செய்த ஊழியத்தினாலே யோசேப்பு பானப்பாத்திரக்காரனால் நினைவுகூறப்பட்டான். பார்வோனுக்கு தேவன் தரிசனம் கொடுத்த போது அந்த தரிசனத்திற்கான அர்த்தத்தைச் சொல்ல எகிப்திலிருந்த சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறவர்களை தேடின போதுதான் பானப்பாத்திரக்காரனுக்கு


ஒடிசாவில்

## ஆலய பிரதிஷ்டை

**நாள் : 16.02.2024**
**வெள்ளிக்கிழமை**
**நேரம்: காலை 10 மணி**

**தேவ செய்தி:**
**சகோ. T. ஆசீர் ஞானராஜ்**
தமிழ் – ஒரியா

**இடம்: முக்கந்தபூர் பணித்தளம், இராயகடா மாவட்டம், ஒடிசா.**

**தொடர்புக்கு:**
**94383 51303, 93378 48884**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!
தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!

சிறைச்சாலைக்குள்ளே தான் கண்ட சொப்பனத்திற்கு சரியான அர்த்தம் சொன்ன யோசேப்பை குறித்து ஞாபகம் வந்தது. யோசேப்பு தீவிரமாய் சிறைச்சாலையிலிருந்து பார்வோனுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டான். அவனுடைய வாழ்க்கையில் சகோதரர்களாலே பகைக்கப்பட்டதற்கு காரணம் ஒரு தரிசனம் தான். அவன் வாழ்க்கையில் உயர்வை கொண்டு வந்ததும் ஒரு தரிசனம் தான். தரிசனத்தைக் கொண்டே யோசேப்பை ஆண்டவர் உன்னதத்திலே சிங்காசனத்தில் உட்கார வைத்தார். சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையிலே சில நேரங்களில் சோதனைகளை கொண்டு வருவது எதற்காக, நம்மை புடமிட்டுப் பார்ப்பதற்காக, நம்முடைய வாழ்க்கையிலே அவர் ஆசீர்வாதங்களை கொடுப்பதற்காக உயர்வை தருவதற்காகத்தான் ஆண்டவர் சோதனைகள் வழியாக நடத்துகிறார். நீங்கள் இப்பொழுது சகித்துக் கொண்டிருக்கிற சோதனையான பாதை ஒரு நாள் சாதனையாக மாறப் போகிறது. அந்த சாதனைக்காகத்தான் இந்த சோதனை. சோதனை வந்துவிட்டால் அடுத்ததாக ஜெயம் நிச்சயமாக வரும்.

தானியேல் புத்தகத்தில் அந்நிய தேசமாகிய பாபிலோன் தேசத்திலே சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்கள் சந்தித்த சோதனைளை வாசிக்க முடியும். இந்த இடத்தில் அவர்களோடு இணைக்கப்பட்ட தானியேல் இல்லை. ஒருவேளை தானியேல் நேபுகாத்நேச்சார் நிறுத்திய அந்த பெரிய பொற்சிலையை அவன் வணங்கியிருப்பானா. அப்படியில்லை எதிராளிகளுடைய கண்களில் தானியேல் படவில்லை. ஏனென்றால் தானியேல் ஏற்கனவே உயர்த்தப்பட்டு விட்டான். நேபுகாத் நேச்சாரினால் சிறைபிடித்துக்கொண்டு போகப் பட்ட பெருங்கூட்டம் வாலிபர்களில் நான்கு பேர் ஜெபிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அதிலே தானியேல் முன்பே கர்த்தரால் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டான். ஆனால் மற்ற மூன்று பேருக்கும் தேவன் சிங்காசனத்தை கொடுக்க வேண்டும். அதனால் சோதனையை அனுமதித்து தான் உயர்வைக் கொடுக்க தேவன் சித்தங்கொண்டார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இந்த மூன்று பேரும் ஜெபித்து கொண்டேயிருந்திருக்கக் கூடும். இப்பொழுது அவர்களுக்கும் உயர்வு கொடுக்க வேண்டுமல்லவா. ***ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தினான். பின்பு ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், பொக்கிஷக்காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான். – தானி.3:1,2*** பொன்னினால் அந்த சிலை முழுவதும் செய்திருந்தான்.

*வாத்திய கருவிகள் எல்லாம் அடிக்கும் போது அத்தனை பேரும் அந்த பொற்சிலைக்கு முன்பாக தாழ விழ வேண்டும். அதில் ஒருவன் உற்று பார்த்திருக்கிறான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை மட்டும் பார்த்திருக்கிறான். எல்லாரும் முகங்குப்புற விழுந்து கிடக்கிறார்கள். ராஜாவும் விழுந்து கிடக்கிறான். ஆனால் அவர்களை எதிராளிகள் பார்க்கும் படிக்கு தேவன் செய்தார். ஏனென்றால் அவர்களை பாபிலோனிலே உயர்த்தி வைக்க தேவன் சித்தங்கொண்டார். அவர்கள் மூவரும் பொற்சிலைக்கு முன்பாக விழவில்லையென்று ராஜசமூகத்தில் சொன்னபோது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவின் சமூகத்திற்கு முன்பாக கொண்டுவரப்பட்டார்கள். மறுபடியும் மேளதாளங்களை ஒழுங்கு செய்து அடியுங்கள். ஏனென்றால் இவர்கள் மறந்து போய் நின்றிருக்கலாம் என்று சொன்னான். உங்களுக்கு மற்றொரு சந்தர்ப்பத்தை நான் கொடுக்கிறேன். அப்பொழுது மேள தாளங்கள் முழங்கும் போது நீங்கள் தாழ விழ வேண்டும் என்று ராஜா கட்டளையிட்டான். அப்படியில்லையென்றால் எரிகிற அக்கினி சூளையில் நீங்கள் போடப்படுவீர்கள் என்று அந்த வார்த்தையை ராஜா சொன்ன போது சாத்ராக், ஷோக், ஆபேத்நேகோ ஒருமனப்பட்டவர்களாக* ***நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். – தானியேல் 3:17*** *தப்புவித்தாலும் தப்புவிக்காமல் போனாலும் நாங்கள் அவர்மேல் தான் நம்பிக்கை வைப்போம் என்று சொன்னார்கள்.*

**ஒடிசா மாநில பணித்தளத்தில் கோராபுட் மாவட்டம் சங்குடிபடா கிராமத்தில்தான் முதலாவது இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். 2008ம் ஆண்டு கலவரம் அப்போதுதான் உண்டானது. அப்போது நன்றாக ஜெபிக்கக் கூடிய ஒன்பது வாலிப பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் தரிசனங்களைக் கண்டு அவ்வப்போது எங்களிடம் பகிர்ந்து கொள்வார்கள். அவ்வளவாக அபிஷேகத்தின் நிறைவைப் பெற்றிருந்தார்கள். அதில் ஒருசில பிள்ளைகள் வெளியில் வேலைக்காக சென்று கொண்டிருந்த சமயம். திடீரென்று மத எதிர்ப்பாளர்கள் வந்து இங்கு மதமாற்றம் செய்வதாக கேள்விப்பட்டோம் என்று சொல்லி அங்கே பஞ்சாயத்தை கூட்டினார்கள். அங்கே பொதுவாக காவல்நிலையத்திற்கு செல்ல மாட்டார்கள். எல்லா கிராமத்திலேயும் மேடை இருக்கும் கற்களாலே நாற்காலி போல தயார் செய்திருப்பார்கள். அதிலே கிராமத்தின் தலைவர் உட்கார்ந்திருப்பார். வழக்குகள் இருந்தால் அவருக்கு முன்பாக கொண்டு வருவார்கள். அவர் நியாத்தீர்ப்பு செய்வார். அதற்கு கிராம மக்கள் கட்டுப்பட வேண்டும். அந்த இடத்திலே கிராம மக்கள் எல்லோரும் கூடி நிற்கும் போது மத எதிர்ப்பாளர்கள் வந்து நின்று இந்த பிள்ளைகளில் மூன்று பேரை பிடித்து அவர்கள் மத்தியில் நிறுத்தியிருக்கிறார்கள். நீங்கள் வெள்ளைக்காரச் சாமியை கும்பிடுவதாக கேள்விப்பட்டோம். இது கிராமத்திற்கும் கிராமத்தில் உள்ள தெய்வத்திற்கும் ஆகாது.**

**ஆகவே இதற்கு முன்பாக தெரிந்தோ தெரியாமலோ செய்திருக்கலாம். நீங்கள் எல்லாரும் கிராம மக்கள் மத்தியில் மன்னிப்பு கேட்டுவிட்டு இனி இயேசுவை விட்டு விடுவோம் என்று சொல்லிவிட்டு நீங்கள் சென்றுவிடலாம். இல்லையென்றால் உங்களை கொன்று விடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். மூன்று பிள்ளைகளும் போய் நிற்கும் போது பெற்றோர்கள் அவர்கள் அருகே போன போது மதவெறியர்கள் நீங்கள் யாரும் அருகில் செல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்று பிள்ளைகளையும் நடுவில் நிற்க வைத்து இயேசுவை மறுதலிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். இயேசு வேண்டாம் என்று சொன்னால் நீங்கள் போகலாம் என்றார்களாம். அதில் ஒரு பெண் மிகவும் சத்தமாக சொல்லியிருக்கிறாள் இல்லை இயேசு தான் எங்களுக்கு வேண்டும் என்று சொல்லியிருக்கிறாள். இவர்கள் அந்த பிள்ளைகளை பலவந்தம் பண்ணும்படியாக மிகவும் கோபத்தோடு போய் அந்த பிள்ளைகளுடைய மேலாடையை எல்லாருக்கும் முன்பாக கழற்றியிருக்கிறார்கள். ஆனாலும் அந்த பிள்ளைகள் தலையை குனிந்து அழுது கொண்டே எங்களைக் கொன்று போட்டாலும் நாங்கள் எங்கள் இயேசுவை விட மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஒடிசா மாநிலத்தில் உண்டான எழுப்புதலில் ஒரு பெரிய பங்கை தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிறார். பஞ்சாயத்து கூடிய மக்கள் மத்தியில் அந்த பெண் பிள்ளைகள் மிகவும் அடிக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் இயேசுவை விடவே இல்லை. அதன் மூலமாக அந்த கிராம தலைவரின் மனைவியை ஆண்டவர் இரட்சித்தார். கிராம தலைவர் இப்போது மரித்து போனார் ஆனால் அவரும் விசுவாசியாக தான் மரித்தார். அவருடைய குடும்பமே இரட்சிக்கப்பட்டு இன்று விசுவாசிகளாக இருக்கிறார்கள். அந்த கிராமத்தில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வாலிப பிள்ளைகளில் இரண்டு பேர் அரசு வேலையில் இருக்கிறார்கள். மற்றொரு மகள் அந்த பகுதியிலே பஞ்சாயத்து தலைவியாக இருக்கிறாள். கர்த்தர் அவர்களின் தலையை உயர்த்தினார்.**

*சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ராஜாவைப் பார்த்து திட்டமாய் சொன்னவுடனே அவன் கடுங்கோபம் கொண்டான். அவன் கடுங்கோபங்கொண்டு சூளையை ஏழு மடங்கு அதிகப்படுத்துங்கள் என்று கட்டளையிட்டான். எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாற்பத்திரண்டு மீட்டர் உயரத்திற்கு அந்த நெருப்பு எரிந்தது என்று வேத ஆராய்ச்சி சொல்லுகிறது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை கட்டி நெருப்பிலே போடும்படிக்கு தன்னுடைய ராணுவத்திலே இருக்கிற பலசாலிகளிலே ஒரு சிலரை அழைத்தான். சாதாரணமாக யூதர்கள் நன்றாக உயரமாக திடகாத்திரமாக இருப்பார்கள். குள்ளமாக இருப்பவர்களை பார்ப்பது அரிது. அப்படிப்பட்ட யூதர்களை கட்ட நல்ல பலசாலிகளை நெபுகாத்நேச்சார் தெரிந்து கொண்டு அவர்களை கட்டி குண்டுகட்டாக தூக்கிக் கொண்டு போய் எரிகிற நெருப்பிலே போட போனபோது அந்த பலசாலிகள் எரிகிற நெருப்பின் அக்கினியில் பாதிக்கப்பட்டு*

இறந்து போனார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அவ்வளவு ஆக்ரோஷமான நெருப்பின் மத்தியில் மூன்று பேரையும் தூக்கி உள்ளே போட்டார்கள். அப்பொழுது ராஜா சிங்காசனத்தை விட்டு எழுந்து நின்று பார்க்கிறான். மூன்று பேரும் அந்த எரிகிற அக்கினி ஜூவாலையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூடவே நான்காவதாக ஒரு நபரும் நடக்கிறார். அவர் தான் நம்முடைய தேவன். அந்த சோதனை ஒரு சாதனையாக மாறியது. பின்பு நேபுகாத்நேச்சார் ஒரு நிருபத்தையே எழுதினான். ***அப்பொழுது நேபுகாத்நேச்சார் வசனித்து: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான். பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான். – தானி. 3:28–30*** நான்கு வாலிபர்களுடைய ஜெபத்தினை கேட்டு தேவன் சோதனையை சாதனையாக மாற்றி ராஜாவை ஒரு நிருபத்தையே எழுத வைத்திருக்கிறார். நம்முடைய தேசத்தை ஆளுகிறவர்களை மாற்றுவது என்பது இயலாத காரியம் அல்ல. சோதனை தான் சாதனையைக் கொண்டு வரும். நேபுகாத்நேச்சாரின் இருதயத்தில் அவர்கள் மூன்று பேருக்கும் ஏதாவது செய்ய வேண்டுமென்று எண்ணம் தோன்றியது. அதனால் பாபிலோன் தேசத்திலே மூன்று பேரையும் உயர்த்தினான்.

**ஆப்பிரிக்க கண்டத்திலே குறிப்பிட்ட திருச்சபையிலே நடைபெற்ற உண்மை சம்பவம். ஆராதனை நடந்து கொண்டிருக்கும் போது ஒரு பெரிய கூட்டத்தார் ஆயுதங்களோடு கூட அந்த ஆலயத்தின் முன் பகுதியிலே மேடையில் வந்து நின்றார்கள். ஆறு பேர் கையில் பெரிய துப்பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆராதனை நன்றாக அபிஷேகத்தோடு நடந்து கொண்டிருக்கிறது. எல்லாரும் அமைதியாக இருங்கள் கண்களை திறந்து பாருங்கள் என்று அந்த கூட்டத்தில் ஒருவன் சத்தமிட்டான். இயேசுவை மறுதலிக்கிறேன் என்று சொல்பவர்கள் கையை மேலே தூக்குங்கள் இல்லையென்றால் உங்கள் சரீரம் சல்லடையாக போய்விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் போதகர் இரண்டு கைகளையும் தூக்கி விட்டார். என்னை காப்பாற்றி விடுங்கள் என்று கூக்கூரலிட்டார். அவர் கையை தூக்கினவுடனே அந்த திருச்சபையில் இருந்த அவ்வளவு பேரும் கையை தூக்கினார்கள். அந்த தீவிரவாதிகள் ஆறுபேரும் கடைசியாக மேலே போட்டிருந்த துணிகளையெல்லாம் களைந்து போட்ட போது தான் அவர்கள் அந்த சபையில் இருந்த வாலிபர்கள் என்று**

**தெரிந்தது. போதகர் கண்களைத் திறந்து அவர்களை பார்த்து நீங்கள் தேவ சமூகத்தில் இப்படி விளையாடுகிறீர்களே என்று கேட்ட போது இல்லை சோதனை காலம் வரும் போது இங்குள்ள யாரெல்லாம் பரலோகத்திற்கு போவார்கள் என்று பரிசோதிக்க நினைத்து நம் சபையில் எவ்வளவு பேர் போவார்கள் என்று சோதனை செய்ய நினைத்து செய்தோம். ஆனால் நம் சபையில் யாருமே போவதற்கு வாய்ப்பில்லை நாம் தோற்று விட்டோம் என்று அந்த வாலிபர்கள் சொல்லியிருக்கிறார்கள்.**

*சோதனை நம்முடைய வாழ்க்கையில் சாதனையை கொண்டு வரும். கர்த்தருடைய பிள்ளைகள் வாழ்க்கையில் தேவ சித்தமில்லாமல் ஒரு மயிர் கூட கீழே விழாது. நம்முடைய மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.* ***என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர். – சங்.139:2*** *என்று தாவீது சொல்லுகிறான். உன் இருதயத்தின் வேண்டுதல்களை அவர் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவாக ஒன்றுமே கிடையாது. நம்முடைய சிந்தனைகள் கூட ஆண்டவருக்கு தெரியும். அந்த ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையில் என்று வந்தாரோ அன்றிலிருந்து நாம் அவருடைய பிள்ளைகள். அவருடைய அனுமதி இல்லாமல் நம்முடைய வாழ்க்கையில் எதுவுமே வராது. பேதுருவை பார்த்து ஆண்டவர் சொன்னார் சீமோனே, சீமோனே சாத்தான் உன்னை சுளகில் போட்டு புடைப்பதற்கு என்னிடம் அனுமதி கேட்டான். நான் அனுமதி கொடுத்துவிட்டேன். சாதாரணமாக வீட்டில் சுளகில் தானியங்களை போட்டு புடைக்கும்போது அது மேலே கீழே என்று செல்லும். அதைப் போல உன்னை புடைப்பதற்கு நான் அனுமதி கொடுத்து விட்டேன் என்று சொல்லுகிறார். ஆனாலும் உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக நான் வேண்டுதல் செய்கிறேன் என்று இயேசு சொன்னார். நான் இந்த காரியத்திலே இறங்கும் போது வாக்குத்தத்தத்தோடு கூட தானே இறங்கினேன். தரிசனத்தை ஆண்டவர் தானே கொடுத்தார் என்று ஒருவேளை நீங்கள் சிந்திக்கலாம். உங்கள் விசுவாசத்தை தேவன் பரீட்சிக்க சித்தங்கொண்டார்.*

*வசனம் என்பது வாக்குத்தத்தம் தானே ஆனால் அது எதிர்மறையாக இருக்கிறதே. யோசேப்பினுடைய வாழ்க்கையிலும் எதிர்மாறாகத்தான் இருந்தது. ஆனால் தேவன் என்ன தீர்மானித்தாரோ அது தான் நடந்தது. சாத்தான் உங்கள் வாழ்க்கையில் ஒன்றும் செய்ய முடியாது.*

*தேவன் எதை செய்ய நினைக்கிறாரோ, தீர்மானிக்கிறாரோ அதைத்தான் செய்வார். அவருடைய அனுமதியில்லாமல் உங்கள் வாழ்க்கையில் ஒன்றும் நடக்காது. ஏனென்றால் நாம் கர்த்தருடைய பிள்ளைகள். நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவர் கொண்டு வருகிற சோதனையெல்லாம் அது நிச்சயமாக சாதனையாகத்தான் மாறும். அதை சாதனையாக தேவன் மாற்றி உங்களை ஆசீர்வதிப்பார்.*

# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம் லம்டாபுட் பணித்தளம்

**மக்கிடி:**

- கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக. அனீஷ் என்ற சிறுவனுக்கு கண்கள் சிவந்து காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. ஜெபத்தினால் கர்த்தர் சுகம் கொடுத்தார்.
- ஈகோ என்பவருக்கு கால்வலியிலிருந்து கர்த்தர் சுகம் கொடுத்தார்.
- சாமு, ரகு என்பவரது குடும்பத்தினர் இணைந்து ஆராதனை நடத்துவோம் என்று கூறுகின்றனர். இவர்கள் ஓரிடத்தில் ஒருமனதோடு கூடிவர ஜெபியுங்கள்.
- மால்தி என்ற சகோதரிக்கு கையில் ஒரு கட்டி ஏற்பட்டுள்ளது. இந்த சகோதரியின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- ரகு என்பவரது தகப்பனார் கடந்த வாரம் மரித்து விட்டார். குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

**பவுஸ்குடா:**

- பிரேமா என்ற சிறுமிக்கு கர்த்தர் சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.
- மனோஜ் என்பவர் குனைபடா கிராமத்தில் ஒரு கடை நடத்தி வருகிறார். இந்த இடத்தின் பேரில் வழக்கு நிலுவையில் உள்ளது. விரைவில் இந்த வழக்கு முடிய ஜெபியுங்கள்.
- செல்லமா என்ற சகோதரியின் மகள் லொமித்தா தாய் தகப்பனுக்கு கீழ்ப்படிவதில்லை. எங்காவது போய் சுற்றித்திரிகிறாள். அதிகமாக தொலைக்காட்சி பார்க்கிறாள். இந்த வாலிபப் பிள்ளையின் (வயது 18) இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**லம்டாபுட்:**

- லம்டாபுட் சபையில் கடந்த மூன்று நாள் உபவாச கூட்டத்தில் மூன்று பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர்.
- ஜோசேப் என்ற சகோதரன் வேலைசெய்யுமிடத்தில் சம்பளம் சரிவர கொடுப்பதில்லை. இவர்கள் சம்பளம் கிடைக்கவும், ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- சாமுவேல் என்ற சிறு குழந்தைக்கு கடந்த ஆறு நாட்களாக இரவு நேரங்களில் காய்ச்சல் வருகிறது. மேலும் வயிற்றோட்டம் ஏற்படுகிறது. இந்த சிறுவனின் சரீர சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சுசீலா என்ற சகோதரியின் மூத்த மகன் பிரீட் சரிவர ஆராதனைக்கு வருவதில்லை. இந்த சிறுவனின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- ஸ்ருதி என்ற சகோதரி சரியாக சாப்பிட முடியாமல் கஷ்டப்படுகிறாள். மேலும்

இவர்களுக்கு ஒரு இடம் விற்பனையாக வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்

- சோகர் கிராமத்தில் 2 குடும்பம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். இக்கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.
- மாலிப்பெட்டா கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

**குனைய்படா பஞ்சாயத்து:**

- நுவாகுடா, கும்மார்குடா, கொஜிரிபுட், கொத்திப்படா, கடாம், நலச்சுவா, லிமாபுட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## மல்கன்கிரி மாவட்டம் சித்ரகோண்டா பணித்தளம்

**ரெக்காபள்ளி:**

- ரேசு கிலோ என்ற சகோதரி மனநிலை பாதிக்கப்பட்டு உள்ளார்கள்.
- பிரதான்கிலோ என்பவர் சரீரம் முழுவதும் சொறி வியாதியினால் கஷ்டப்படுகிறார்கள். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- ரெக்காப்பள்ளி கிராமத்தில் அநேகர் சொறி வியாதியினால் கஷ்டப்படுகின்றனர். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சொனா கிலோ என்பவர் வுடீ வியாதி உள்ளது. சுகத்திற்காக ஜெபியுங்கள். இவர் ஜெபத்தினால் இப்போது சற்று சுகமாக இருக்கிறார்.
- சொனா கிலோ என்பவரது மகள் ஜெயந்தி கிலோ மூச்சடைப்பு மற்றும் வலிப்பு வியாதியினால் கஷ்டப்படுகிறார். இவரின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- கிருஷ்ணோ ஹந்தால் என்பவரது மனைவிக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். இப்போது மூன்று வாரமாக தொடர்ந்து ஆராதனைக்கு வருகிறார்கள். முன்பு மாதத்தில் நான்கு முறை வலிப்பு வியாதி வரும். இப்போது ஆராதனைக்கு வர ஆரம்பித்த பிறகு ஒருமுறை கூட வரவில்லை. இவர்களது பரிபூரண விடுதலைக்காவும், இரட்சிப்பின் நிச்சயத்திற்காகவும் ஜெபியுங்கள்.
- அர்ஜுன் என்பவர் தனது மனைவியை விட்டு பிரியும் நிலையில் இருந்தார். ஜெபத்திற்கு பின்பு கர்த்தர் சமாதானம் கொடுத்தார்.

### சுவிசேஷ ஊழியம்

- மாலிகுடா, குசும்பதர், டெஜெங், பியன்குடி, நுவாகுடா, ஜொடாஆம், சன்ஜொடாஆம், ராம்குடா, கொசம்புட், மோஜாகுடா, தடுபாடு, பங்குருபல்லி, கொஜிரிபுட், செமிலிப்பதர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். மேலும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தினோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## கோராபுட் மாவட்டம் படுவா பணித்தளம்

**ஜம்முகுடா:**

- ஆராதனைக்கு 25 பேர் வருகின்றனர். விசுவாசிகள் எண்ணிக்கை அதிகமாகும்படி

ஜெபியுங்கள்.

- அர்கு, பிகினு என்பவர்கள் குடும்பமாக ஆராதனைக்கு வருகின்றனர்.
- கித்தா என்ற சகோதரி புதிதாக ஆராதனைக்கு வருகிறார்கள். இவளது தாய், தகப்பன் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- சங்கீதா, பொரசா என்ற சகோதரிகளும் புதிதாக ஆராதனைக்கு வருகின்றனர்.
- மாத்தியு என்பவர் நமது சபைக்கு வருகிறேன் என்று கூறுகிறார். இவர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவர். ஆனால் விபச்சாரம், திருட்டு, ஏமாற்றுதல், கஞ்சா வியாபாரம் போன்றவற்றை செய்கிறார். இவர் முழுமையான இரட்சிப்பை பெறவும் மனந்திரும்பவும், கெட்ட பழக்கவழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.
- ரகு, சுக்குதேப் ஆகியோர் நமது சபைக்கு வரும்படி ஜெபியுங்கள்.
- சந்தோஷ் என்பவரது சரீரத்தில் ஒரு வியாதி உள்ளது ஏதாவது கடினமான வேலை பார்த்தால் கண்கள் வீங்கி வெளியே வருவதுபோல் காணப்பட்டு தலை மிகவும் சூடாகிவிடும். இவரது பிள்ளைகள் ஆராதனைக்கு வருகின்றனர்.
- சித்ரா ஹந்தால் என்ற சகோதரிக்கு காய்ச்சல் உள்ளது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.

**சுவிசேஷ ஊழியம்:**

- பல்குடா, சதராம், குஞ்சிகுடா, பல்லிகாட், நுவாகுடா, பொடுகுடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இக்கிராமங்களில் அலேக் மதத்தை பின்பற்றுபவர்கள் உள்ளனர். பொரஜா ஆதிவாசி மக்கள் உள்ளனர்.
- சதா ஹந்தால் என்பவர் ஜக்கிபாரி கிராமத்தில் ஆராதனைக்கு வருகிறேன் என்று கூறுகிறார். இவரது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.
- சிரிமா என்ற விதவை தாயார் மற்றும் அவரது மகன் சொம்புரு பின்மாற்றமாகியுள்ளனர். இவர்களது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.
- சிபொ ஹந்தால், புங்கேரி ஹந்தால் ஆகியோர் நமக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இவர்களது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

## இராயகடா மாவட்டம் பருத்திகுப்போ பணித்தளம்

- பொஜா மண்டங்கி என்ற வயதான தகப்பனார் திடீரென்று வாய் பேசமுடியாமல் கை, கால் செயலற்று கஷ்டப்பட்டார். மிகவும் சுகவீனமாய் காணப்பட்டார். ஜெபித்த போது இயேசு அற்புத சுகம் கொடுத்தார். இப்பொழுது சுகமாயுள்ளார்கள். தேவனுக்கே மகிமை.
- சாலே மண்டிங்கி என்ற சகோதரி வேலைக்கு சென்ற போது கீழே விழுந்து மிகவும் அடிபட்டு காயத்தோடு காணப்பட்டார்கள். ஜெபிக்கும்படி அழைத்தார்கள் ஜெபம் செய்து வந்தேன். இப்பொழுது காயம் எல்லாம் ஆறி சுகமாகி வருகின்றார்கள். தேவனுக்கே மகிமை.

# உலகச் செய்திகள்

1. தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் வரும் 12ஆம் தேதி தொடங்கும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.
2. சிலி நாட்டில் பற்றி எரியும் காட்டுத்தீயால் ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கிரையான நிலையில் 46 பேர் தீயில் கருகி உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
3. லடாக் யூனியன் பிரதேசத்துக்கு முழுமையாக தனிமாநில அந்தஸ்து வழங்கக்கோரி லே, கார்கில் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற போராட்டம் நடைபெற்றது. லடாக் தனி மாநில அந்தஸ்து வழங்கக்கோரி லே, கார்கில் மாவட்டங்களில் முழுஅடைப்புப் போராட்டமும் நடைபெற்றது.
4. மனித மூளையுடன் சிப் இணைக்கும் புதிய சோதனையை எலான் மஸ்க்கின் நிறுவனம் களமிறங்கியுள்ளது. டெஸ்லா நிறுவனத்தின் உரிமையாளரான எலான் மஸ்க் விண்வெளி மற்றும் மருத்துவத்துறையிலும் புதுமைகளை புகுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக நியூராலிங்க என்ற நிறுவனத்தை தொடங்கிய அவர், மூளையில் உள்ள நரம்புகளை தூண்டும் புதிய ஆராய்ச்சிகளை செய்து வருகிறார்.
5. அமெரிக்காவில் அதிபர் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக தெற்கு கரோலினா மாகாணத்தில் ஜோ பைடன் வெற்றி பெற்றார்.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| **கோவை** | **– 94865 88270** |
| **சென்னை** | **– 81909 25800** |
| **திருச்சி** | **– 94886 34482** |
| **மேட்டுப்பாளையம்** | **– 81909 25800** |
| **ஈரோடு** | **– 99434 46728** |
| **ஓசூர்** | **– 94869 07831** |
| **திருவள்ளூர்** | **– 94451 49642** |
| **பெங்களூரு** | **– 94869 19522** |
| **தாராபுரம், பொள்ளாச்சி** | **– 94865 88270** |
| **வெள்ளகோவில்** | **– 94865 88270** |
| **ஒட்டன்சத்திரம்** | **– 75984 03162** |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.













நமது பிரேமோ நிகேதன் பள்ளியில்
நடைபெற்ற குடியரசு தினவிழா
நிகழ்ச்சிகள்

Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.02.2024. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

## முதலூரில்...

# எழுப்புதல் உபவாச ஜெபம்



**நாள்:**

**02.03.2024**

முதல் சனிக்கிழமை
காலை 10 மணி முதல்
மதியம் 3 மணி வரை

**இடம்:**

எழுப்புதல் ஜெப மையம்,
முதலூர்.

**தேவ செய்தி:**

## சகோ. T. ஆசீர் ஞானராஜ்

**தொடர்புக்கு: 96294 99532**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**